தினமணி (22.02.2020)

# டிஎன்பிஎல் சார்பில் மார்பக புற்றுநோய் கண்டறிய இலவச பரிசோதனை முகாம்



முகாமை தொடக்கி வைக்கும் காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மைப் பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன் மற்றும் முதன்மை பொதுமேலாளர் (உற்பத்தி) தங்கராசு உள்ளிட்டோர்.

கரூர், பிப். 21: டிஎன்பிஎல் ஆலை சார்பில் பெண்களுக்கான மார்பகப் புற்றுநோய் கண்டறியும் இலவச பரிசோதனை முகாம் அண்மையில் நடைபெற்றது.

உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு ஆலையைச் சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் வசிக்கும் மகளிருக்கு ஆலை சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற முகாமில் விமா (லைப் லைன்) மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் மருத்துவர் ஸ்ரேயா ராஜ்குமார் தலைமையில், மருத்துவக் குழுவினர் 344 மகளிருக்கு பரிசோதனை செய்து ஆலோசனை வழங்கினர். முன்னதாக முகாமை காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் மற்றும் முதன்மை பொதுமேலாளர் (உற்பத்தி) தங்கராசு, முதன்மை பொது மேலாளர் (வணிகம் மற்றும் மின்னியல் மற்றும் கருவியியல்) பால சுப்ரமணியன், பொது மேலாளர் (மனித வளம்)டேவிட் மாணிக்கம் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.